<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>இ.ம.எண்.10/2025 in அ.வ.எண்.292/2015</u>
<u>நாள். 25.09.2025</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==============================================================

| | |
|---|---|
| பெயர் = திருமதி. வெண்ணிலா இந்துசமய அறநிலைய துறை ஆய்வாளர், இலால்குடி | கணவர் பெயர்= திரு. |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==============================================================

**<u>PW1 மு.வி</u>**

1) நான் தற்போது இலால்குடி, இந்துசமய அறநிலைய துறை ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து இந்துசமய அறநிலைய துறை இணை ஆணையருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் மேற்படி இணை ஆணையர் எனக்கு அளித்த அதிகார கடிதம் மூலம் அவருக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2) அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன்.

| வ.எண். | ஆவணங்களின் விபரம் | குறிப்பு |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.02.2024 தேதியில் பல்வகை மனு எண்.120/2018 ல் திருச்சி இந்து சமய அறநிலைய துறை இணை ஆணையர் பிறப்பித்த ஆணை | உண்மை நகல் |
| அ.சா.ஆ.2 | 28.01.2025 தேதியில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை W.P(MD) | இணையதள நகல் |

| | | |
|---|---|---|
| | No.25946/2024 and WMP(MD)No.22013/2024 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு | |
| அ.சா.ஆ.3 | 19.03.2025 தேதியில் பெரம்பலூர் இந்து சமய அறநிலைய துறை உதவி ஆணையர் செயல்முறை ஆணை (ந.க.எண்.1115/2024/அ 5) | உண்மை நகல் |
| அ.சா.ஆ.4 | 26.03.2025 தேதியில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை Review Appln (MD)No.51/2025 in W.P(MD) No.25946/2024 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு | இணையதள நகல் |
| அ.சா.ஆ.5 | 05.05.2025 ல் பெரம்பலூர் இந்து சமய அறநிலைய துறை உதவி ஆணையர், திருச்சி இந்து சமய அறநிலைய துறை இணை ஆணையருக்கு அனுப்பிய கடிதம் (ந.க.எண்.1115/2024–7/அ 5) | உண்மை நகல் |
| அ.சா.ஆ.6 | 02.04.2025 தேதியில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்ட புகைப்படம் (எண்ணிக்கை –2) குறுந்தகடுடன் | அசல் |

இம்மனுவின் அசல் வழக்கான அ.வ.எண்.292/2015 ல் திருச்சி இந்து சமய அறநிலைய துறை இணை ஆணையர் 6 ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 14.02.2024 தேதிய உத்தரவு அ.சா.ஆ.1 ஆனது 6 ம் பிரதிவாதி இணை ஆணையரால் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

3) இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதி இணை ஆணையரிடம் தாக்கல் செய்த மனுவின் மீது போடப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். அ.சா.ஆ.1 உத்தரவில் வாதி பெயர் இல்லை என்றால் சரிதான், வாதி இந்து சமய

அறநிலைய துறைக்கு சொந்தமான நிலத்தின் குத்தகைதாரர் இல்லை என்பதால் உத்தரவில் சேர்க்கப்படவில்லை. அ.சா.ஆ.1 பல்வகை மனு உத்தரவு தொடர்பாக 1ம் பிரதிவாதி கொடுத்த மனுவில் இவ்வழக்கு பற்றியோ, இவ்வழக்கில் முன்னதாக பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவு பற்றியோ குறிப்பிட்டுள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) அ.சா.ஆ.2 நீதிபேராணை மனு வனஜா என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படியார் மேற்படி திருக்கோவிலில் குத்தகைதாரர். அ.சா.ஆ.2 நீதிபேராணை மனுவில் தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.3 செயல்முறை ஆணையில் வாதியின் பெயர் இல்லை என்றால் சரிதான், வாதி இந்து சமய அறநிலைய துறைக்கு சொந்தமான நிலத்தின் குத்தகைதாரர் இல்லை என்பதால் உத்தரவில் சேர்க்கப்படவில்லை, மேற்படி நிலத்தின் குத்தகைதாரருக்கு மட்டுமே அறிவிப்பு அனுப்பப்பட்டது.

5) அ.சா.ஆ.4 மேற்படி வனஜா தாக்கல் செய்த சீராய்வு மனு என்றால் சரிதான். அ.சா.ஆ.5 ல் வாதியின் பெயர் இல்லை என்றால் சரிதான். வாதி திருக்கோவிலின் பரம்பரை அறங்காவலர் என்று 1ம் பிரதிவாதி முருகானந்தம் இணை ஆணையரிடம் உத்தரவு பெற்றுள்ளாரா என்றால் உத்தரவு பெற்றுள்ளார். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் 2015ம் ஆண்டு வழக்கு சொத்தை பார்வையிட்டு வாதி வழக்கு சொத்தில் கடை வைத்துள்ளதாக அறிக்கை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6) 1978 ம் ஆண்டு முதல் வாதியின் தகப்பனார் வழக்கு சொத்தில் பெட்டிக்கடை நடத்தி வந்தாரா என்றால் சரிதான், 2011 ல் நெடுஞ்சாலைக்காக நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கையில் வாதியின் பெட்டிக்கடை உள்ள இடமும் கையகப்படுத்தப்பட்டுவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். மேற்படி இடம் கையகப்படுத்தப்பட்ட பிறகு தாவா கோவிலுக்கு உரிய மீதி இடத்தில் வாதி பெட்டிக்கடை நடத்த அனுமதி வழங்கப்பட்டு நடத்தி வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) அதன் பின்னிட்டும் வாதி தொடர்ந்து மேற்படி பெட்டிக்கடை நடத்தி வருவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.சா.ஆ.6 ல் 2 வது புகைப்படத்தில் காணப்படும் அரிசிகடை தற்போது வரை உள்ளது என்றால் சரிதான். ஆக்கிரமிப்புகளை அகற்ற பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அ.சா.ஆ.3 ல் ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டிய இடமானது காலி மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் காலி மனையாகவும், வணிக கட்டிடமாகவும் இருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

8) அ.சா.ஆ.3 ன் படி அகற்றப்பட்ட பெட்டிக்கடையானது வாதி உடையது என்றால் சரிதான். இந்து சமய அறநிலையதுறை சட்டம் பிரிவு 78 ன்படி ஆக்கிரமிப்பாளருக்கு கொடுக்கவேண்டிய அறிவிப்பினை வாதி சண்முகத்திற்கு எங்களது துறையில் இருந்து கொடுத்தோமா என்றால் இல்லை, வாதி குத்தகைதாரர் இல்லை என்பதால் கொடுக்கப்படவில்லை. மேற்படி சட்டம் பிரிவு 79 ன்படி ஆக்கிரமிப்பை அகற்றி சுவாதீனம் எடுக்கும் முன்பு வாதிக்கு முறைப்படி எழுத்துப்பூர்வ அறிவிப்பு கொடுக்கப்பட்டு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை,

வாதிக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை.

9) 02.04.2025 தேதியில் வாதியின் பெட்டிக்கடையை நாங்கள் ஆக்கிரமிப்பு அகற்ற சென்ற போது வாதி பெட்டிக்கடை போர்டை வைத்திருந்தாரா என்றால் இல்லை, நான் பார்க்கவில்லை. "அ.வ.எண்.292/2015 வழக்கில் இடைக்கால தடை உறுத்துக்கட்டளை மனு எண்.866/2015 மனுவில் மனுதாரரின் பெட்டிக்கடையை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது" என்ற வாசகம் அடங்கிய போர்டை வாதி ஆக்கிரமிப்பு அகற்றும் காலத்தில் வைத்திருந்தார் என்றால் நான் பார்க்கவில்லை.

10) ஆக்கிரமிப்புகளை அகற்ற செல்லும்பொழுது காவல்துறையின் உதவி வேண்டும் என்று நான் தான் கோரினேனா என்றால் இல்லை, பெரம்பலூர் உதவி ஆணையர் தான் கோரினார். அ.சா.ஆ.1 உத்தரவில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டிய இடம் என்று 4876 சதுரடி என்று மட்டுமே காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அ.சா.ஆ.1 ல் முதல் பக்கத்தில் புல எண்.72/1ல் உள்ள 4876 சதுரடி மனையும், அதில் கண்டுள்ள வணிகம்/மனையும் என்று காட்டப்பட்டுள்ளது.

11) அ.சா.ஆ.1 உத்ரவில் கண்ட ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லும் போது வாதி இவ்வழக்கு குறித்தும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடைக்கால தடை உறுத்துக்கட்டளை குறித்தும் கூறினாரா என்றால் வாதி அங்கு இல்லை, அந்த சமயத்தில் மேற்படி பெட்டிக்கடையில் இருந்த ஒரு பெண் வழக்கு இருப்பதாக மட்டும் உதவி ஆணையரிடம் வாய்மொழியாக தெரிவித்தார், இடைக்கால தடை உறுத்துக்கட்டளை குறித்து எதுவும்

கூறவில்லை.

12) மேற்படி சட்டம் பிரிவு 79(2) ன்படி ஆக்கிரமிப்பாளர்களுக்கு அறிவிப்பு கொடுத்த பிறகு உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆக்கிரமிப்புகளை அகற்ற சென்ற போது வாதியின் பெட்டிக்கடையை தவிர மேற்படிபுல எண்ணில் வேறு எந்த கட்டுமானமும் கிடையாது என்றால் சரிதான்.

13) இவ்வழக்கில் தரப்பினராக உள்ள இணை ஆணையர் இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உறுத்துக்கட்டளை உத்தரவை அறிந்தும், 1ம் பிரதிவாதி சட்ட விரோதமாக வாதியை வெளியேற்றுவதற்கு 6ம் பிரதிவாதியான இணை ஆணையர் சட்டத்திற்கு புறம்பாக உதவி உள்ளார் என்றால் சரியல்ல. இணை ஆணையரின் செயல்முறைகள் எதிலும், இவ்வழக்கு குறித்தோ, இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உறுத்துக்கட்டளை உத்தரவு குறித்தோ எதுவும் குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

14) அவசரகதியில் வாதிக்கு முறையான அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் அவரது தரப்பை கேட்காமல் சட்ட விரோதமாக வாதியின் பெட்டிக்கடையை அகற்றிவிட்டோம் என்றால் சரியல்ல, இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உறுத்துக்கட்டளை உத்தரவு குறித்து தெரியாது. ஆக்கிரமிப்பை அகற்ற சென்ற போது மேற்படி கடையில் இருந்த பெண் வழக்கு குறித்து கூறிய பின்னர் அது குறித்து ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி கால அவகாசம் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

15) ஏன் கால அவகாசம் கொடுக்கவில்லை என்றால் மேற்படி ஒரு வழக்கு இருப்பதாக கூறிவிட்டு அந்த பெண் அந்த இடத்தை விட்டு சென்றுவிட்டார், அதனால் அவகாசம் கொடுக்கவில்லை. இம்மனு தாக்கல் செய்யப்பட்ட பிறகாவது, 6ம் பிரதிவாதி அரசு வழக்கறிஞரிடம் வழக்கு குறித்து கேட்டு தெரிந்து கொண்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இம்மனுவானது 1ம் பிரதிவாதியை நீதிமன்ற உத்தரவை அவமதித்த காரணத்திற்காக கைது செய்து சிறையில் அடைப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தை தற்போது தான் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம்.

16) 1ம் பிரதிவாதி சட்ட விரோதமாக ஆக்கிரமிப்புகளை அகற்றியதற்கு நான் உறுதுணையாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான உரிய விதிமுறைகள் எதனையும் நாங்கள் பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. வாதியை வெளியேற்ற 1ம் பிரதிவாதியின் சட்ட விரோத மற்றும் இந்நீதிமன்ற அவமதிப்பு செயலுக்கு நாங்களும் உறுதுணையாக கூட்டுசதி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வடுவாம்பாள் மற்றும் அவரது மகள் வனஜா ஆகியோர் தாவா சொத்தில் அனுமதிக்கப்பட்ட குத்தகைதாரர்களா என்றால் ஆமாம்.

17) அதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் வாதி கோவில் அலுவலகத்தில் உள்ள கேட்பு வசூல் பதிவேட்டில் ஆவணங்கள் இருக்கும், ஆனால் நான் பார்த்ததில்லை. வடுவாம்பாள் மற்றும் அவரது மகள் வனஜா ஆகியோர் என்ன வியாபாரம் செய்தார்கள் என்றாலும், அதில் எதாவது கட்டுமானம் இருந்ததா என்றாலும் அதுப்பற்றி தெரியாது.

<u>குறுக்கு விசாரணை</u>

1) எனது முதல்விசாரணையில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வடுவாம்பாளின் மகள் தான் வனஜா என்றால் சரிதான். மேற்படி வனஜா அ.சா.ஆ.2 நீதிபேராணை மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தான புல எண்.72/1ல் நிலம் கையகப்படுத்தப்பட்டது போக மீதமுள்ள விஸ்தீரணமான 4876 சதுரடிக்கான பழைய மாத வாடகை எவ்வளவு என்றால் முதலில் வாடகை மிகவும் குறைவாக இருந்ததால், 2017 ஆண்டு வாக்கில் நியாய வாடகை ரூ.59,000/–என்று நிர்ணயிக்கப்பட்டது.

2) மேற்படி ரூ.59000/– நியாயவாடகையை எதிர்த்து வனஜா 2024ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் கிளை நீதிப்பேராணை மனு W.P(MD) No.25946/2024 and WMP(MD)No.22013/2024 யை தாக்கல் செய்தார் என்றால் சரிதான், மேற்படி மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் நியாய வாடகை ரூ.59,000/–என்று நிர்ணயிக்கப்பட்டது சரியானது என்றும் வாடகை நிலுவைத் தொகையை மேற்படி வனஜா செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் சுவாதீனத்தை அறநிலைய துறையிடம் கொடுத்துவிட்டு வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

3) அ.சா.ஆ.2ல் பக்கம் 4ல் சிறப்பு அரசு வழக்கறிஞர் இலால்குடியில் உள்ள சப்தரீஷ்வரர் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் சத்தியமூர்த்தி என்பவரது 2162 சதுரடி அளவுள்ள உணவகத்திற்கு மாத வாடகை ரூ.80,150/– என்று நிர்ணயிக்கப்

பட்டுள்ளதாகவும், இம்மனுதாரர் வனஜா சுவாதீனத்தில் இல்லாமல் 3ம் நபருக்கு உள்வாடகைக்கு விட்டுவிட்டு பெங்களூரில் வசித்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பக்கம் 3வது பத்தியில் மேற்படி வனஜாவின் தாயார் 14.01.2010ல் இறந்துவிட்டதாகவும், அதன் பிறகு மேற்படி வனஜா பொறுப்பேற்று நிர்வாகம் செய்து வருவதாக மேற்படி வனஜா கூறியுள்ளார் என்றால் சரிதான்.

4) மேற்படி சொத்திற்கான வாடகை பாக்கியை மேற்படி வனஜா செலுத்தவில்லை என்று அவர் மீது ஆக்கிரமிப்பாளர் என்றும், சுவாதீனம் கொடுக்க வேண்டும் என்றும் செயல்முறைகள் இணை ஆணையரால் எடுக்கப்பட்டது என்றால் குத்தகைதாரரான வடுவாம்பாள் மற்றும் அவரது மகளான வனஜா ஆகிய இருவருக்கு எதிராகவும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், செயல்முறைகள் எடுக்கப்பட்டது.

5) மேற்படி அ.சா.ஆ.2 நீதிபேராணை மனுவில் உத்தரவிற்கு எதிராக சீராய்வு மனு வனஜாவால் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவில் 26.03.2025ல் அ.சா.ஆ.4 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) மேற்படி அ.சா.ஆ.4ல் மேற்படி மனு 4ம் எதிர்மனுதாரரான இவ்வழக்கு 1ம் பிரதிவாதி சிதம்பரநாதன் தரப்பின் வழக்கறிஞர் அ.சா.ஆ.2 உத்தரவிற்கு பிறகு மனுதாரர் வனஜா வழக்கு சொத்தில் இருந்து 02.04.2025ல் வெளியேற்றப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் மேற்படி சீராய்வு மனு முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

7) மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு மேற்படி வனஜாவிற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. அதனை அ.சா.ஆ.2 ல் 3 ம் பக்கத்தில் 3 வது பத்தியில் மேற்படி வனஜா கூறியுள்ளார் என்றால் சரிதான். 19.03.2025 ல் பெரம்பலூர் இந்து சமய அறநிலைய துறை உதவி ஆணையர் அ.சா.ஆ.3 செயல்முறை ஆணையை பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான்.

8) அ.சா.ஆ.3 ல் மேற்படி வனஜா நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகையை 30 நாட்களுக்குள் கட்ட தவறினால், 02.04.2025 ல் காவல்துறை மற்றும் வருவாய் துறை உதவியுடன் மேற்படியாரிடம் இருந்து சுவாதீனம் எடுக்கப்பட்டு கோவில் வசம் ஒப்படைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் 01.04.2025 ற்குள் செலுத்தும்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

9) அ.சா.ஆ.2 நீதிபேராணை மனு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது 28.01.2025 என்றால் சரிதான். 05.05.2025 ல் பெரம்பலூர் உதவி ஆணையர், திருச்சி இணை ஆணையருக்கு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோவில் வசம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது என்று கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ல் கண்ட வனஜா தான் மேற்படி வனஜா என்றால் சரிதான்.

10) வடுவாம்பாள் மற்றும் மேற்படி வனஜா ஆகியோர் மீது அ.சா.ஆ.1 பல்வகைமனு எண்.120/18 மனுவில் 14.02.2024 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அ.சா.ஆ.1 உத்தரவில் வடுவாம்பாள் இறப்பு என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

வனஜா வாதி சண்முகத்திற்கு வழக்கு சொத்தை உள்வாடகைக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

11) உள்வாடகைதாரர்களையும் மேற்படி அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான உத்தரவுகள் மற்றும் செயல்முறைகள் கட்டுப்படுத்தும் என்றால் சரிதான், கட்டுப்படுத்தும். அ.சா.ஆ.6 புகைப்படங்கள் வழக்கு சொத்தை சுவாதீனம் எடுத்ததற்கான புகைப்படங்கள் என்றால் சரிதான். இணை ஆணையர் சட்டப்படியே உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றாலும், மேற்படி உத்தரவை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உறுதி செய்துள்ளது என்றாலும், எனவே இணை ஆணையரின் செயல்முறைகள் நீதிமன்ற அவமதிப்பு ஆகாது என்றாலும் சரிதான்.